முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1106

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

09.10.2022, ஞாயிற்றுக்கிழமை

1. தர்மஞானியே அரங்கா போற்றி
தவபலமிக்க தேசிகா போற்றி
வறுமை விரட்டி உலக மக்களை
வளமாக வாழவைக்க வந்த ஞானியே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரைஆசி
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 22 ம் நாள் 09.10.2022, ஞாயிற்றுக்கிழமை)
ஆற்றல்பட சுபகிருது நங்கை திங்கள்
அருளுவேன் அரங்கனுக்கு சக்தி பெருக
3. பெருகவே அரங்கனுக்கு நித்தம் நித்தம்
பிரம்ம சூட்சும சர்வ ரகசியங்களும் வரமாக ஆறுமுகன் அருளிவர
வணங்கி அரங்கன் தடம் வந்தவர்க்கெல்லாம்
வையகத்தில் சித்தி முத்தி உறுதியாகும்
4. உறுதிகொண்டு அரங்கனை குருவென
உணர்ந்து உயர்ந்து நிலைகள் மாறும் வண்ணம்
வணங்கி தொடர்ந்து ஜெபதபங்கள்
வள்ளலே வாழும் ஞானியே என போற்றி வர
5. வருகின்ற மக்கள் வாழ்வினில்
வளமும் ஞான பலமும் ஆயுள் பலமும் கூடி
பலமுற சர்வ வழிகளிலும்
பழுதில்லாத ஏற்றங்கள் பெருகியே
6. பெருகியே ஞானவான்கள் என்கின்ற
பிசகில்லா அரங்கன் சக்தி கூடி
முருகப்பெருமான் என் காட்சி பெறுவதோடு
முழுமைதரும் ஞானவாழ்வில் அவர்களெல்லாம் ஞானவான்கள் ஆட்சிக்காலத்திலும் இடம்பெற்று
7. இடம் பெற்று கலியினில்
இனிதே அரங்கன் தேடல்வழி ஞானிகளாகி
ஆகியே உலக மாற்றம் புரிவர்
அற்புதத்தை பெற உலகோர் அரங்கனை நோக்கி வர வெற்றியாகும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–